RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22412

# பெரியபுராணத்தில் ஆட்சியாளர்களின் பண்பாடு

**வா. இராஜசசிக்குமார் [அ, *], க. வேலு [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) திருப்பனந்தாள்-612504, தமிழ்நாடு, இந்தியா.

# Culture of Rulers in Periya Puranam

**V. Rajasasikumar [a, *], K. Velu [a]**

[a] Department of Tamil, Sri-La-Sri Kasivasi Swaminatha Swamigal Arts College, (Affiliated to Bharathidasan University), Thiruppanandal-612504, Tamil Nadu, India.

* Corresponding Author:
vasusasikumar1976@gmail.com

Received: 04-07-2022
Revised: 18-09-2022
Accepted: 28-09-2022
Published: 06-10-2022

Check for updates

**ABSTRACT**

Chera King Cheraman, Chozha King Cochenganan, Pugazh Cholan, Manuneethi Chozhan, CoonPandiyan (NindraSer Nedumaran), Iyyadigal KaadavarKone, Kazhar Singar, Idankaziyar, Narasingha Munaiaraiyar, Meipporular, Kurruvar were mentioned in Periyapuranam. Their Devotion and their service to the temples were also manuscripted. They offered donations and lands for conducting rituals and poojas. This article focuses how their dedicated service reached the temples. More over Rulers worshipped and respected the ardent devotees of Shiva. They fullfilled all their needs. This article discuss that how devotees were treated and protected in their Kingdom with solid evidences.

**Keywords:** Periya Puranam, Ruler, Devotee, God Shiva, King

## முன்னுரை

பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள மாமன்னர்களும் குறுநில மன்னர்களும் அன்போடு குடிமக்களை அரவணைத்து, அருளோடு நீதிவழங்கி, செங்கோல் சிறப்புடையவர்களாக விளங்கினார். நாட்டிற்குக் காவலனாக நிலைபெற்ற உயிர்களைக் காக்கின்ற மன்னவனானாலும், அவனது படைகளாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், விலங்குகளாலும் குடிமக்களுக்கு உண்டாகின்ற பயத்தைப் போக்கி குடிமக்களைக் காப்பவனே சிறந்த மன்னனாவான் என்கின்றார் சேக்கிழார் இதனை,

“மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்

தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்

ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்

ஆனபயம் ஐந்துந்தீர்ந்து அறங்காப்பான் அல்லனோ?” என்ற பெரியபுராணப் பாடல் மூலம் அறியமுடிகின்றது (Vellaivaaranam, 1982).

மன்னன் இல்லாத நாடு உயிர் இல்லாத உடலுக்குச் சமமாகும் என்பதை,

“மன்னன் இன்றி வாழும் மண்ணுலகு எண்ணுங்காலை

இன்னுயிர் இன்றிவாழும் வாழ்க்கையை ஒக்கும்” என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

கம்பர் தசரதனைக் குறிப்பிடும்போது,

“உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்” என்று கூறுகின்றார் (Govindan,1958).

“நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்றே

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு” என்று புறநானூறு மன்னனை உயிராகவும் மக்களை உடலாகவும் குறிப்பிடுகின்றது (Subramaniyan, 2010).

சங்ககாலம் தொடங்கி, சேக்கிழார் காலம்வரை தொடர்ந்து வந்த ‘மன்னன் உயிர், மக்கள் உடல்’ என்ற அரசியல் கோட்பாடு கம்பர் காலத்தில் “மன்னன் உடல், மக்கள் உயிர்” என்று மாறிவிட்டது என்று தெரிகின்றது.

சிவபெருமான் திருவடிகளை உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொண்டு உலகஉயிர்களை எல்லாம் தங்களின் உயிராகக் கருதி, செம்மையாக ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் (சிவனடியார்களின்) பண்புகளை (அ) சேரர், (ஆ) சோழர், (இ) பாண்டியர், (ஈ) பல்லவர்கள், (உ) குறுநிலமன்னர்கள் என்னும் தலைப்புகளில் ஆராய்வோம்.

## சேரர் சிவபக்தி

சேரமான்பெருமாள் நாயனார் (சேரமன்னர்) ஒப்பற்ற சிவபக்தியை உடையவர். நாள்தோறும் சிவபெருமானுக்கு வழிபாடுகள் செய்து வந்தார். அவரது வழிபாடுகளை ஏற்று மகிழ்ச்சியடைந்த சிவபெருமான் நாள்தோறும் தன்னுடைய பாதச்சிலம்பொலியைச் சேரமான்பெருமாளின் காதுகளுக்கு விருந்தளித்தார். இதனை,

“நீடும் உரிமைப் பேரரசால் நிகழும்பயனும் நிறைதவமும்

தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற்றம்பலத்துள்

ஆடும்கழலே எனத்தெளிந்து அறிவால் எடுத்த திருப்பாதம்

கூடும் அன்பில் அர்ச்சனை மேற்கொண்டார் சேரர்குலப்பெருமான்”

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## சிவனடியார் பக்தி

சேரமான்பெருமாள் நாயனார், சுந்தரரை யானை மீதேற்றித் தான் அவருக்கு வெண்சாமரம் வீசியதிலிருந்தும் அவரது திருவடிகளைத் தூய நன்னீரால் கழுவியமையிலிருந்தும் அவர் சிவனடியார் மீது கொண்டிருந்த பக்தியை உணரமுடிகின்றது.

சேரமான்பெருமாள் யானை மீதேறி திருக்கோயிலுக்குச் சென்று, சிவபெருமானை வழிபட்டு விட்டு, நகர்வலம் வரும்போது, உவர்மண் பொதியைச் சுமந்து வந்த துணிவெளுப்பவர் ஒருவர் மழையில் நனைந்து பின் வெயிலால் காய்ந்து வரும்போது, அவருடைய உவர்மண் ஒட்டிய வெண்ணிற உடலைக்கண்ட சேரமான்பெருமாள், திருநீறு பூசிய சிவனடியாராகவே அவரைக் கருதி, யானையை விட்டுக் கீழே இறங்கி அவரது காலில் விழுந்து வணங்கினார். அவர் பயந்துபோய் யாரென்று அடியேனை வணங்கியது அடியேன் வண்ணான் என்று கூற சேரமான் பெருமாள் அடிதொழுத சேரன் தங்கள் அடியவன். திருநீற்றின் தோற்றத்தால் சிவனடியார் என நினைந்து வணங்கினேன். நீங்கள் வருந்தாது செல்க என்று கூறி துணி வெளுப்பவரைச் செல்லுமாறு கூறினார். இதனால் சேரமான் பெருமான் சிவனடியார்கள் மீது கொண்டிருந்த பக்தி புலனாகின்றது. இதனைச் சேக்கிழார்,

“சேரமான் பெருமான் தொழக்கண்டு சிந்தைகலங்கி முன்வணங்கி

யாரென்று அடியேனைக் கொண்டது அடியேன் அடிவண்ணான்

சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்

வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும் எனமொழிந்தார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## சோழர் சிவபக்தி

சோழன் கோச்செங்கணான் சிறந்த சிவபக்தர். அவர் பல சிவாலயங்களை எழுப்பியுள்ளார். இதனைச் சேக்கிழார்,

"கோதை வேலார் கோச்செங்கண் சோழர்தாம்இக் குவலயத்தில்

ஆதிமூர்த்தி அருளால் முன் னறிந்து பிறந்து மண்ணாள்வார்

பூதநாதன் தான்மகிழ்ந்து பொருந்தும் பெருந்தன் சிவாலயங்கள்

காதலோடும் பலஎடுக்குந் தொண்டு புரியுங் கடன்பூண்டார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

மேலும் சோழன் கோச்செங்கணான் பல சிவாலயங்களுக்குத் திருப்பணிகளைச் செய்துள்ளார். இதனைச் சேக்கிழார், "பானற்களத்துத் தம்பெருமான் அருங்கோயில் பணி சமைத்தார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

சோழன் கோச்செங்கணான் சோழ நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளில் சிவபெருமானுக்குத் திருக்கோயில்கள் பலவற்றை அமைத்ததோடு, திருக்கோயில்கள் தோறும் சிவபெருமானுக்கு அமுதுபடையல் நடத்துவதற்கு மிகுந்த செல்வமும் கொடுத்தார்.

இதனைச் சேக்கிழார்,

"மந்திரிகள் தமைஏவி வள்ளல்கொடை அனபாயன்

முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்

அந்தமில்சீர்ச் சோணாட்டின் அகனாடு தொறுமணியார்

சந்திரசேகரன் அமருந் தானங்கள் பலசமைத்தார்" (Vellaivaaranam, 1982)

என்றும்,

"அக்கோயில் தொறுஞ்சிவனுக்கு அமுதுபடி முதலான

மிக்கபெருஞ் செல்வங்கள் விருப்பினால் மிகஅமைத்துத்

திக்கனைத்துந் தனிச்செங்கோல் முறைநிறுத்தித் தேர்வேந்தர்

முக்கண்முதல் நாடமாடும் முதற்றில்லை முன்னினார்" என்றும் குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982). மேற்கூறிய கோச்செங்கணானைப் பற்றிய செய்திகளால் அவரின் சிவபக்தியை அறியமுடிகின்றது.

### சிவபக்தி

சோழ மன்னர் புகழ்ச்சோழர் சிறந்த சிவபக்தியும் சிவனடியார் பக்தியும் உடையவர். இவர் சிவாலயங்களில் நாள்தோறும் வழிபாடுகள் நிகழவும், சிவனடியார்களின் குறைகளைப் போக்க அவர்களின் குறிப்பறிந்தும் நிறை பொருள் கொடுத்தும் உதவினார். இதனைச் சேக்கிழார்,

"பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்

நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர் தமைக்

குறையிரந்து வேண்டுவன குறிப்பின் வழி கொடுத்தருளி

முறைபுரிந்து திருநின்று முதல்நெறியே பாவிப்பார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

புகழ்ச்சோழரது பட்டத்துயானை சிவபெருமானுடைய வழிப்பாட்டிற்காக மலர் கொண்டு வந்த சிவகாமியாண்டாரது பூக்குடையைச் சிதறிவிட்டது. யானையின் அக்கொடிய செயலுக்காக அந்த யானையையும் அதை அடக்கத் தவறியதற்காக அதன் பாகர்களையும் வெட்டி வீழ்த்தினார், எறிபத்தர் என்ற சிவனடியார்.

இதைக் கேட்டறிந்த புகழ்ச்சோழர், "சிவனடியார்கள் தவறு செய்யமாட்டார்கள்" என்று கூறி, நிகழ்ந்ததற்கு மன்னிப்பை வேண்டி, எறிபத்தரிடம் தன்னையும் வெட்டுமாறு கூறி, எறிபத்தரது மழுவால் வெட்டினால் அந்த மழுவுக்கு இழுக்கு என்று கூறித் தனது உடைவாளை எடுத்துக் கொடுத்தார்.

இதனை,

"சென்றுசிவ காமியார் கொணர்ந்திருப்பள் ளித்தாமம்

அன்றுசித றுங்களிற்றை அறஎறிந்து பாகரையும்

கொன்றஎறி பத்தர்எதிர் "என்னையுங்கொன்ற ருளும்என

வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டின் மிகச்சிறந்தார்" என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## சிவனடியார் பக்தி

புகழ்ச் சோழரின் படைவீரர்கள் போரின்போது போர்க்களத்திலிருந்து கொண்டுவந்த தலைகளில் ஒருவீரரின் தலை "சடைத்தலையாக இருந்ததைக் கண்டு, அத்தலை சிவனடியார் ஒருவரின் தலையாக இருக்கும் என்று கருதித் தன்னுடைய கண்களிலிருந்து கண்ணீர் சிந்த மிகுந்த மனவருத்தம் அடைந்தார். தீர்க்க இயலாத பழிநேர்ந்து விட்டதே எனக் கவலை கொண்டார். அது மட்டுமின்றி அச்சடைத்தலையை ஒரு பொன்தட்டில் வைத்துத் தன் தலைமீது வைத்துக்கொண்டு வலம் வந்து சிவபெருமானின் திருஐந்தெழுத்தை (சிவாயநம) ஓதிக்கொண்டே எரியும் நெருப்பினுள் புகுந்து தன் உயிரை நீத்தார். இதனைச் சேக்கிழார்,

"கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்

கொண்டு திரு முடிதாங்கிக் குலவும் எரி வலங்கொள்வார்

அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி

மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982). இந்நிகழ்விலிருந்து புகழ்ச்சோழர் கொண்டிருந்த சிவபக்தியையும் சிவனடியார் மீது கொண்ட பக்தியையும் அறியமுடிகின்றது.

## சிவபக்தி

சிவபெருமான்மீது மிகுந்த பக்திகொண்ட மனுநீதிச்சோழன், சிவபெருமானுடைய வழிபாட்டிற்கு வேண்டிய பொருள் செல்வங்களை, ஆகமங்கள் கூறிய நெறிப்படி திருக்கோயில்களுக்கு நிவந்தங்களாக வழங்கி, சிவபெருமானுக்குரிய வழிபாடு நாள்தோறும் சரியாக நடைபெற ஏற்பாடு செய்தார். இதனைச் சேக்கிழார்,

"பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்

எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு

அங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்

துங்க ஆகமம் சொன்ன முறைமையால்” என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## ஆட்சி செய்த திறம்

மனுநீதிச் சோழன் உலக உயிர்களுக்கு எல்லாம் கண்ணும், உயிருமாகத் திகழ்ந்து ஆட்சி செய்தார். தேவர்களும் மகிழத்தக்க வகையில் உலக உயிர்களின் நன்மைக்காக பல வேள்விகள் செய்தார். அறம், பொருள், இன்பம் என்ற அறநெறியை வழுவாமல் காத்து பல அரசர்கள் போற்ற சிறப்பாக ஆட்சி செய்தார். இதனைச் சேக்கிழார்,

“மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்

கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்

விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்

எண்ணி லாதன மாண இயற்றினான்” என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## நீதி வழங்கிய திறம்

மனுநீதிச் சோழனின் மகன் வீதிவிடங்கன் தேரின் மீதேறி, அரச வீதியில் உலாச் சென்றான். அப்போது ஒரு பசுவின் கன்று ஓடிவந்து தேரின் பின் சக்கரத்தில் சிக்கிக்கொண்டு உயிரைவிட்டது. தன் கன்று இறந்த சோகந்தாளாமல் தாய்ப்பசு அரண்மனை வாயிலில் இருந்த ஆராய்ச்சி மணியை ஒலித்து நீதிகேட்டது.

பசுவின் கன்றைத் தன்மகன் கொன்ற பாவத்திற்காக, வேதத்தால் விதிக்கப்பட்ட பரிகாரத்தைச் செய்திடவும், முடியாமல் நீதியை வழங்கிடவும் முடியாமல் தவித்த மனுநீதிச் சோழன், அத்தாய்ப்பசு அடைந்த துயரத்தைத் தானும் அடைய வேண்டும் என்று முடிவெடுத்தான். தனது ஒரே மகனைத் தேர்ச்சக்கரத்தின் கீழே படுக்க வைத்து, அவன்மீது தேர் ஏற்றிக் கொன்று, அப்பசு அடைந்த துயரத்தையே தானும் அடைந்தான். இவ்வாறு மனுநீதிச் சோழன் நீதி வழங்கிய திறம் போற்றுதற்குரியது. இதனைச் சேக்கிழார்,

“ஒருமைந்தன் தன்’குலத்துக் குள்ளான்என் பதுவும் உணரான்

தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்

மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்

அருமந்த அரசாட்சி அரிதோ? மற் றெளிதோதான்” என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

மனுநீதிச் சோழன் நீதிவழங்கிய திறம் இக்காலத்தில் ஆட்சியாளர்களும், மக்களும் இன்றியமையாது பின்பற்றிட வேண்டியது. யாரிடத்திலும் குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல், நடுவுநிலைமை பொருந்தி, செய்யத்தக்கதை ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும் என்கின்றார் திருவள்ளுவர். இதனை,

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை”

என்ற திருக்குறளால் அறிய முடிகின்றது. இத்திருக்குறளுக்கு மனுநீதிச் சோழன் என்றென்றும் இலக்கியமாகத் திகழ்கின்றார் (Varadharasanaar, 1949).

## பாண்டியர் உண்மையை ஏற்கும் பண்பு

கூன்பாண்டியன் சமணசமயமே உண்மைச் சமயம் பிறசமயங்கள் அதற்கு மாறானது என்று நம்பி, சமணசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்தார். பிறகு சமண முனிவர்களால் தீர்க்கப்படாத தனது

சூலை நோய் திருஞானசம்பந்தரால் தீர்க்கப்பட்டு, கூனும் நீங்கி, நின்றசீர் நெடுமாறன் ஆனார். மேலும், திருஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவமே உண்மைச் சமயம் என்று நிலைநாட்டிய பிறகு பாண்டியன் நின்ற சீர்நெடுமாறனும் சமண சமயத்தை விட்டு விலகி சைவசமயத்தைச் சேர்ந்தார். இதனைச் சேக்கிழார்,

"தென்னவன் பணிந்து நின்று திருவால வாயில் மேவும்

மன்னனே! சமணர் தங்கள் மாய்கையால் மயங்கியானும்

உன்னையான் அறிந்திவேளை உறுபிணி தீர்ந்தாட் கொள்ள

இன்னருட் பிள்ளை யாரைத் தந்தனை இறைவா! என்றான்" என்று நின்றசீர் நெடுமாறன் இறைவனை வேண்டுவதாக குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

## பிறசமயக் காழ்ப்பின்மை

பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் சமணசமயத்தைப் பின்பற்றிய போது அவரின் மனைவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தார்கள். அதோடு சைவசமய நெறியையும் பரப்பினார்கள். பாண்டிய நாட்டில் சைவசமயம் புத்துயிர்பெற பாடுபட்ட மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இருவரது சமயவிவகாரத்தில் பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் தலையிடாததிலிருந்து அவரது பிறசமயக் காழ்ப்பின்மை (வெறுப்பின்மையை) உணரமுடிகின்றது.

## பல்லவர் சிவபக்தி

"அரசபதவி இன்னல் தருவது" என உணர்ந்து அதைத் தன் மகனிடம் கொடுத்துவிட்டு தான் பல சிவாலயங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டுச் சிவத்தொண்டுகள் பல செய்தவர் ஐயடிகள்காடவர்கோன். சிவபெருமானை வணங்கிப் பாடல்கள் பல பாடி பல திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்தவர் ஐயடிகள் காடவர்கோன். இதனால் இவரது சிவபக்தியை அறியலாம். இதனைச் சேக்கிழார்,

"தொண்டுரிமை புரக்கின்றார் சூழ்வேலை உலகின்கண்

அண்டர்பிரான் அமர்ந்தருளும் ஆலயங்க ளானஎலாம்

கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே

வண்டமிழின் மொழிவெண்பா ஓரொன்றா வழத்துவார்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

## ஆட்சித் திறம்

ஐயடிகள் காடவர்கோன் அரசராயிருந்த போது, பிறநாடுகளையும் வென்று அந்த நாடுகளுக்கெல்லாம் நல்லாட்சியை வழங்கியவர். தருமநெறி தழைத்தோங்கவும் சைவநெறி விளங்கிடவும சிறப்பாக ஆட்சி செய்தவர். இதனை சேக்கிழார்,

"திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்

பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிப்படுத்துத்

தருமநெறி தழைத்தோங்கத் தரணிமேற் சைவமுடன்

அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும் அந்நாளில்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

### சிவபக்தி

பல்லவ மன்னன் கழற்சிங்கர் மிகுந்த சிவபக்தி உடையவர். பல சிவாலயங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு, பல தொண்டுகளைச் செய்தவர்.

இதனைச் சேக்கிழார்,

"குவலயத் (து) அரனார்மேவுங் கோயில்கள் பலவுஞ்சென்று

தவலரும் அன்பில் தாழ்ந்து தக்கமெய்த் தொண்டுசெய்வார்

சிவபுரிஎன்ன மன்னும் தென்திருவாரூர் எய்திப்

பவமறுத் தாட்கொள்வார்தங் கோயிலுட் பணியப்புக்கார்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

ஒரு நாள், தன் மனைவியுடன் திருவாரூர் பெருமானைத் தரிசனம் செய்யச் சென்றார் கழற்சிங்கர். அப்போது திருக்கோயில் பூமண்டபத்தில் வீழ்ந்த புதியமலரை அரசியார் எடுத்து முகர்ந்து விடுகின்றார். அதைக் கவனித்த செருத்துணைநாயனார் என்னும் சிவனடியார் அரசியாரின் செய்கைக்காக அவருடைய மூக்கை அறுத்து விடுகின்றார். அச்செய்தியைக் கேள்வியுற்றுக் கண்ட மன்னன் கழற்சிங்கர், செருத்துணையாரின் செயலைக் கண்டிக்காமல் சிவபெருமானுக்குரிய மலரை எடுத்து முகர்ந்த குற்றத்திற்காக தன்னுடைய மனைவியின் கையையும் (மலரை எடுத்த குற்றத்திற்காக அரசியாரின் கையை) வெட்டி விடுகின்றார். இதனைச் சேக்கிழார்,

"கட்டிய உடைவாள் தன்னைஉருவி அக்கமழ்வாசப்பூத்

தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்பதென்று

பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவியான

மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடு துணித்தாரன்றே" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

சிவபெருமானுக்குரிய மலரை எடுத்து முகர்ந்த குற்றத்திற்காகத் தன் மனைவியின் மூக்கை அறுத்த செருத்துணையாரின் செயலைக் கண்டிக்காமல், குற்றத்திற்கான தண்டனை அதோடு போதும் என்றும் விட்டுவிடாமல், மலரை எடுப்பதற்குத் துணைபுரிந்த தன் மனைவியின் கையையும் வெட்டி வீழ்த்திய செயலிலிருந்து கழற்சிங்கரின் சிவபக்தியின் வலிமையையும் சிறப்பையும் உணர முடிகின்றது.

### ஒருமைப்பாடு

சேக்கிழார் சாதி, இன வேறுபாடு கருதாத சமய அடிப்படையிலான ஒருமைப்பாட்டை பெரிதும் விரும்பியிருக்கின்றார். இவ்விருப்பத்தைக் கழறிற்றிறவார் புராணத்தில் பதிவு செய்திருக்கின்றார்.

சேரமான்பெருமாள், சிவபெருமானைத் தரிசனம் செய்வதற்காகத் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குச் செல்கின்றார். அங்கு பாண்டிய மன்னரோடு சோழமன்னரும் வீற்றிருக்கின்றார், அங்குவந்த சேரமான் பெருமாளையும் சுந்தரரையும் பாண்டிய மன்னன் இனிதே வரவேற்கின்றார். மூவேந்தரும் ஒருவரோடொருவர் அளவளாவி மகிழ்ந்து சுந்தரருடன் ஆளவாய் பெருமாளை வணங்கிப் போற்றுகின்றார்கள்.

ஆளவாய்ப் பெருமானை வணங்கியபின், பாண்டியன், சேரனையும், சோழனையும், சுந்தரரையும் தன்னுடன் அழைத்துச் சென்று பல நாட்கள் அவர்களை உபசரித்து அவர்களோடு பேசி மகிழ்ந்தார். இதனைச் சேக்கிழார்,

"உளமகிழக் கும்பிட்டங் குறைவுநாள் உதியருடன்

கிளரொளிப்பூண் வன்றொண்டர் தாமிருந்த இடங்கெழுமி

வளவனார் மீனவனார் வளம் பெருக மற்றவரோ(டு)

அளவளா வியவிருப்பால் அமர்ந்துகலந் தினிதிருந்தார்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

இந்நிகழ்வைச் சேக்கிழார் கூறுவதன் மூலம் மூவேந்தர்களும் தங்களுக்குள் இருந்த இனவேறுபாட்டை மறந்து, நாட்டெல்லைகளை மறந்து ஒற்றுமையாகத் திகழவேண்டும் என்றும், தமிழ்த் தேசியம் பேசுகின்ற ஆட்சியாளர்கள் மொழியடிப்படையில், பண்பாட்டு அடிப்படையில், ஒற்றுமையாகத் திகழவேண்டும் என்றும் சேக்கிழார் பெரிதும் விரும்பியிருக்கின்றார் என்பது புலனாகின்றது.

## குறுநில மன்னர்கள்

'கோனாடு' என்னும் நாட்டை ஆட்சிசெய்தவர் இடங்கழிநாயனார், மிகுந்த சிவபக்தியை உடையவர். சைவநெறி தழைத்தோங்க சிறப்பாக ஆட்சி செய்து, சிவாலயங்களில் வழிபாடுகளும் அருச்சனைகளும் ஆகமவிதிப்படி தொடர்ந்து நிகழ்ந்துவர நிறைய பொருளுதவியவர் இதனைச் சேக்கிழார்,

"சைவநெறி வைதிகத்தின் தருமநெறி யொடுந்தழைப்ப

மைவளருந் திருமிடற்றார் மன்னயகோ யில்விளங்கும்

மெய்வழிபாட் டர்ச்சனைகள் விதிவழிமேன் மேல்விளங்க

மொய்வளர்வண் புகழ்பெருக முறைபுரியும் அந்நாளில்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

சிவனடியார்களுக்கு உணவளிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட சிவனடியார் ஒருவருக்கு, ஒருநாள் உணவளிக்க நெல் கிடைக்காமல் போகவே, அவர் இடங்கழியாரின் அரண்மனைக் கிடங்கினுள் புகுந்து நெல்லைத் திருடினார். இடங்கழியார் அவரை நெல் திருடிய குற்றத்திற்காகத் தண்டிக்காமல் "இவரன்றோ பண்டாரம் எனக்கு" (Vellaivaaranam, 1982) என்று மீதமுள்ள கிடங்குகளையும் திறந்து விட்டு வேண்டுமளவுக்கு நெல்லையும் மற்ற பொருள்களையும் கொண்டு செல்லுமாறு கூறினார். இதனைச் சேக்கிழார்,

"நிறையழிந்த உள்ளத்தால் 'நெற்பண்டா ரமும்அன்றிக்

குறைவில்நிதிப் பண்டார மானஎலாங் கொள்ளைமுகந்(து)

இறைவனடி யார்கவர்ந்து கொள்க' என எம்மருங்கும்

பறையறையப் பண்ணுவித்தார் படைத்தநிதிப் பயன்கொள்வார்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949).

இந்த நிகழ்விலிருந்து சிவனடியார்களுக்கு உதவிட வேண்டும், சிவனடியார்களுக்கு உணவளித்து உதவியவரைப் பாதுகாத்திட வேண்டும் என்ற இடங்கழியாரது பண்பை அறிய முடிகின்றது.

### நரசிங்க முனையரையார்

'திருமுனைப்பாடி' நாட்டை ஆட்சி செய்தவர் நரசிங்க முனையரையர். சிவபெருமானுடைய திருக்கோயில்களுக்குத் திருச்செல்வத்தைப் பெருக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். ஒவ்வொரு திருவாதிரை நாளிலும் சிவபெருமானுக்கு வழிபாடு நிகழ்த்தி, சிவனடியார்களுக்கு உணவு வழங்கி, ஒவ்வொருவருக்கும் நூறு பொன் கொடுத்து வந்தார். தூர்த்தவடிவில் வந்த சிவனடியாரை மற்றவர்கள் இகழக்கூடாது என்பதற்காகத் தானே முதலில் அவரை வணங்கித் தொழுது, முகமன் கூறி அவருக்கு மட்டும் இரட்டிப்பாக இருநூறு பொன்கொடுத்து அனுப்பி வைத்தார். இதனைச் சேக்கிழார்,

"மற்றவர்தம் வடிவிலிருந்த படிகண்டு மருங்குள்ளார்

உற்ற இகழ்ச் சியராகி ஒதுங்குவார் தமைக்கண்டு

கொற்றவனார் எதிர்சென்று கைகுவித்துக் கொடுபோந்தல்

பெற்றியினார் தமைமிகவுங் கொண்டாடிப் பேணுவார்" என்று குறிப்பிடுகின்றார் (Varadharasanaar, 1949). இந்நிகழ்விலிருந்து நரசிங்கமுனையரையாரது சிவனடியாரை உபசரிக்கும் பண்பும், சிவனடியாரை மற்றவர்கள் இகழக்கூடாது என்று கருதும் மனநிலையும் வெளிப்படுகின்றன.

## மெய்ப் பொருளார்

சேதிநாட்டை ஆட்சி செய்த மெய்ப்பொருள் நாயனார், சிவனடியார்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களது விருப்பத்தினை அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வந்தவர். எப்போதும் சிவனடியார் வேடத்தையே சிந்தனையில் தியானித்து. அவர்களை வரவேற்று உபசரித்து அவர்களுக்குச் செல்வம் அளிப்பவர். இதனைச் சேக்கிழார்,

"தேடிய மாடுநீடு செல்வமும் தில்லை மன்றுள்

ஆடிய பெருமான் அன்பர்க் காவனஆகும் என்று

நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது

கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்துவந்தார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

மெய்ப்பொருளாரிடம் பலமுறை போரிட்டுத் தோற்றுப்போன முத்தநாதன் என்பவன் சிவனடியார் வேடம் புனைந்துகொண்டு அரண்மனைக்குச் சென்று மெய்ப்பொருளாரைக் கொன்று விடுகின்றான். அவனுக்கு எவ்வித இடையூறும் நேராதவாறு அவனைப் பாதுகாப்பாக நகரத்தின் எல்லைவரை கொண்டு சென்று விட்டுவிட்டு வருமாறு தனது பாதுகாவலர் தத்தன் என்பவருக்கு ஆணையிடுகின்றார். இதனைச் சேக்கிழார்,

"வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விளக்கப்பட்ட

தாதனாந் தத்தன் தானும் தலையினால் வணங்கித் தாங்கி

"யாதுநான் செய்கேன்?" என்ன எம்பிரான் அடியார் போக

மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ" (Vellaivaaranam, 1982).

மெய்ப்பொருளாரின் மேற்குறித்த செய்கையிலிருந்து தன்னைக் கொன்றவன் தனது பகைவனாகவே இருந்தாலும், அவன் சிவனடியார் வேடம் புனைந்துகொண்டு வந்திருப்பதால் அவனை ஒன்றும் செய்யாமல் விட்டமையிலிருந்து மெய்ப்பொருள் நாயனார் சிவனடியார் மீது கொண்டிருந்த அன்பும், பக்தியும் வெளிப்படுகின்றன.

### கூற்றுவர்

'களந்தை' ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் கூற்றுவர். இவர், சிவபெருமானின் திருநாமத்தை நாள்தோறும் நாவில் நவிலும் பண்புடையவர். சிவபெருமானின் அருள்வலிமையால் பலநாடுகளை வென்று வாகைசூடியவர். சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பல திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் பல செய்து வந்தவர். இதனைச் சேக்கிழார்,

"துன்னார் முனைகள் தோள்வலியால் வென்று சூலப்படையார்தம்

நன்னா மந்தஞ் திருநாவில் நாளும் நவிலும் நலமிக்கார்

பன்னாள் ஈசர் அடியார்தம் பாதம்பரவிப் பணிந்தேத்தி

முன்னாகிய நற் றிருத் தொண்டின் முயன்றார் களந்தை முதல்வனார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

கூற்றுநாயனார் தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று, தனக்கு முடிசூட்டுமாறு வேண்ட, அவர்கள் சோழர்கள் தவிர மற்றவர்களுக்குத் தாங்கள் முடிசூட்டமாட்டோம் என்று மறுத்துவிட அவர்களை ஒன்றும் செய்யாது அவர்களது விருப்பத்தின் படியே அவர்களைச் சேர நாட்டிற்குச் செல்ல அனுமதி வழங்கினார். இதனைச் சேக்கிழார்,

"ஒருமை உரிமைத் தில்லைவாழந் தணர்கள் தம்மில் ஒருகுடியைப்

பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும் படிஇருத்தி

இருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டில் எய்தியபின்

வரும்ஜ யுறவால் மனந்தளர்ந்து மன்றுள் ஆடும் கழல்பணிவார்" என்று குறிப்பிடுகின்றார் (Vellaivaaranam, 1982).

## முடிவுரை

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், குறுநில மன்னர்கள் ஆகிய ஆட்சியாளர்களிடம் அமைந்திருந்த சிவபக்தியின் திறனையும், அவர்கள் சிவனடியார்களை உபசரித்த பாங்கினையும் அறிய முடிகின்றது. அதோடு அம்மன்னர்களது ஆட்சித்திறம், உண்மையை ஏற்கும் பண்பு, பிற சமயக் காழ்ப்பின்மை, ஒருமைப்பாட்டுணர்வு, நீதி வழங்கிய முறைமை போன்றவை தெற்றெனத் தெரிகின்றது. இறையாண்மைமிக்க இன்றைய சமூகத்தில் ஆட்சியாளர்கள் பின்பற்றத் தகுந்த நல்லொழுக்க நெறிகளாக பெரியபுராணம் குறிப்பிடுகின்ற ஆட்சியாளர்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள் அமைந்துள்ளன என்பதை இவ்வாய்வின் மூலம் உணரமுடிகின்றது.

## References

Govindan, V., (1958) Kambaramayanam, Sakthi Kaariyalayam, Chennai, Tamil Nadu, India

Subramaniyan, S.V., (2010) Sanga Ilakkiyam (Ettuthogai Mulamum Theliuraiyum) 3rd Volume, Manivasagar Pathipagam, Chennai, Tamil Nadu, India

Varadharasanaar, M., (1949) Thirukural Theliurai, Thirunelveli Thenninthiya Saiva Sidhandha Noorpathippu Kazhagam, Chennai, Tamil Nadu, India

Vellaivaaranam, T.M., (1982) Periya Puranam, Kasimadam, Thirupanandhal, Tamil Nadu, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License